புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • மே (May) 14, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 20 • விலை(PRICE) ரூ.6.00

# எதை நோக்கிப் பயணிக்கிறது தவெக!

தமிழ்நாட்டின் சமூக அரசியல் அடையாளங்களாக மூன்றை குறிப்பிடலாம். மாநில உரிமை, சமூக நீதி, மதச் சார்பின்மை என்ற மூன்று கோட்பாடுகள் தான் அவை.

காமராசர் ஆட்சிக் காலத்தில் இருந்து திமுக, அதிமுக ஆட்சி வரை இதுதான் தமிழ்நாட்டு அரசியலின் அடிப்படைக் கொள்கை. இதற்கு மாறாக ஆட்சி நடத்த முயன்ற இராஜகோபாலாச்சாரி ஆட்சியில் இருந்து விரட்டப்பட்டார். ஜெயலலிதா ஒரு பார்ப்பனராக இருந்தாலும் கூட இந்துமத கொள்கையில் அவருக்கு ஈடுபாடு இருந்தாலும் மாநில உரிமை, சமூக நீதியைக் கொள்கையை பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார்.

இந்திய தேசிய கட்சியான காங்கிரஸ் ஒரு காலத்தில் இட ஒதுக்கீடு கொள்கையை ஏற்க மறுத்தது; மதச்சார்பின்மை கொள்கையையும் ஏற்க மறுத்தது; பார்ப்பனியக் கட்சியாகவே அது திகழ்ந்தது. சோனியா காந்தி தலைமையின் கீழ் காங்கிரஸ் கட்சி வந்ததற்குப் பிறகு அதில் பண்பு மாற்றங்கள் ஏற்பட்டன. மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலத்தில் தான் திமுகவின் வற்புறுத்தல் காரணமாக மண்டல் பரிந்துரையில் கல்விக்கான இட ஒதுக்கீட்டு உரிமைக்கான சட்டம் கொண்டு வரப்பட்டது.



பாஜகவின் தலைவரான வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது அந்தக் கூட்டணியில் இடம் பெற்றிருந்த திமுகவின் நிர்ப்பந்தம் காரணமாக பாஜக ஆட்சியின் செயல் திட்டங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. காஷ்மீர் மாநிலத்துக்கான சிறப்பு உரிமை காப்பாற்றப்பட்டது; அயோத்தியில் ராமன் கோயில் கட்டும் முயற்சி முறியடிக்கப்பட்டது; பிற மதத்தினர் மீது இந்துமத கொள்கைகளைத் திணிக்கும் பொது சிவில் சட்டம் கொண்டுவரும் முறை தடுத்து நிறுத்தப்பட்டது. திமுக ஆட்சி வலியுறுத்திய குறைந்தபட்ச செயல்திட்டம்தான் இதற்குக் காரணம்.

ஒன்றியத்தில் 2014-ல் பாஜக ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நிலைமை தலைகீழாக மாறியது. ஒற்றை ஆட்சியை நோக்கி இந்துராஷ்டிரத்தை அமைக்க அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது. இந்தியாவின் பெரும்பான்மை மாநிலங்களில் தனது ஆட்சியின் கீழ் பாஜக கொண்டு வந்துவிட்டது. அகில இந்திய கட்சியான காங்கிரஸ் கட்சியால் இதை முறியடிக்க முடியவில்லை. தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த ‘திராவிட மாடல்’ ஆட்சி ஒன்று மட்டுமே இந்த ஆதிக்கத்தை எதிர்த்து துணிவுடன் களத்தில் நின்று போராடியது. தேர்தல் களத்திலும் இதே விளக்கத்தை முன்வைத்தது.

இப்போது தமிழ்நாட்டில் திமுக, அதிமுக இல்லாமல் முதல் முறையாக தமிழக வெற்றிக் கழகத்திற்கு மக்கள் தீர்ப்பளித்து இருக்கிறார்கள். வெகுமக்கள் ஆதரவோடு தனித்து போட்டியிட்ட ஜோசப் விஜய் முதலமைச்சராகி இருக்கிறார். ஆனால் ஆட்சி அமைப்பதற்குரிய 118 எண்ணிக்கையை எட்ட முடியாமல் 10 இடங்கள் குறைவாகவே கிடைத்திருக்கின்றன. இந்த எண்ணிக்கை குறைவுதான் இப்போது மிகப்பெரும் அரசியல் மாற்றங்களை, நெருக்கடிகளை உருவாக்கி இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை ஒன்றிய பாஜக ஆட்சியை தனது வாய்ப்பாக மாற்றிக் கொள்ளும் முயற்சிகளைத் தடுக்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டு மக்களின் பொதுவான உணர்வாக இருந்தது.

குடியரசுத் தலைவர் ஆட்சி வராமல் தடுக்கவும் மீண்டும் ஒரு தேர்தல் திணிப்பை எதிர்கொள்ளக்கூடாது என்ற கருத்திலும் திமுகவும் மதச்சார்பற்ற கட்சிகளும் உறுதியாக இருந்தன. அந்த அடிப்படையில் தான் திமுக அணியில் இருந்த மதச்சார்பற்ற கட்சிகள் வெளியில் இருந்து ஆதரவு தரும் சரியான முடிவை எடுத்தன. திராவிடர் விடுதலைக் கழகம் இதே கருத்தை வலியுறுத்தியது. திமுக தலைவர் மு.க ஸ்டாலின் அவர்களும் இந்தப் பிரச்சனையில் பாஜகவின் ஊடுருவலுக்கு இடம் அளித்து விடக்கூடாது என்ற கொள்கைப் பார்வையோடு தோழமைக் கட்சிகள் வெளியில் இருந்து ஆதரவு தரும் முயற்சிக்கு ஆதரவாகவே இருந்தார்.

இடையில் திமுக ஆதரவுடன் அதிமுக ஆட்சி அமைக்கும் ஒரு திட்டத்தை அதிமுக முன்வைத்த போது திமுகவின் பரிசீலனைக்கு பிறகு அது கைவிடப்பட்டு கருவிலேயே சிதைக்கப்பட்டது. இதுகுறித்து செய்திகள் கசிந்தவுடன் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இத்திட்டம் மக்கள் தீர்ப்புக்கு எதிரானது; தமிழ்நாடு முதலமைச்சரின் மாண்பை சீர்குலைத்து விடும் என்று தனது எதிர்ப்பை அறிக்கையின் வழியாக பதிவு செய்தார். மக்கள் ஆதரவோடு தேர்வு பெற்றுள்ள ஒரு கட்சிக்கு ஆட்சி அமைக்க ஆதரவு தர வேண்டும் என்ற நோக்கத்தோடு மு.க.ஸ்டாலின் தனது கருத்துக்களை நாகரிகமாக வெளிப்படுத்தினார். இதன் காரணமாகவே தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய், இந்த உணர்வுகளுக்கு மதிப்பளித்து மு.க. ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். தமிழ்நாட்டின் பல்வேறு தலைவர்களையும் அவர் சந்தித்து உயர்ந்த நாகரிகத்தை வெளிப்படுத்தி வருகிறார். தமிழ் நாட்டு மக்கள் இதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். அமித் ஷாக்கள் தான் கலங்கிப் போய் அடுத்த சதி திட்டத்திற்கு தயாராகி வருகிறார்கள்.

தனது கட்டுப்பாட்டில் உள்ள அஇஅதிமுகவை இரண்டாக உடைத்து ஒரு அணியை ஆட்சிக்கு ஆதரவாக மாற்றி ஆட்சியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சிகளில் இறங்கி இருக்கிறார்கள். திரு.வேலுமணி தலைமையில் ஒரு அணி ஆட்சிக்கு ஆதரவை தெரிவித்துள்ளது. முதலமைச்சர் ஜோசப் விஜய் கேட்காமலே அவர்களாகவே முன்வந்து இந்த ஆதரவை தந்திருக்கிறார்கள். மற்ற தலைவர்களை சந்தித்தது போல் அஇஅதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை முதலமைச்சர் நேரில் சென்று சந்திக்கவில்லை. ஆனால் அ.தி.மு.க.வில் எடப்பாடி பழனிசாமியின் தலைமை மீது அதிருப்தி கொண்டு தனி அணியாக செயல்பட தொடங்கிய சி.வி. சண்முகம், எஸ்.பி.வேலுமணி தரப்பை நேரில் சென்று சந்திருக்கிறார் விஜய். மறுநாள் சட்டமன்றத்தில் அந்த அதிருப்தி தவெகவுக்கு பெரும்பான்மையை நிரூபிக்க ஆதரவு தருகிறது.

இந்தியாவில் பல மாநிலங்களில் பாஜக செய்த இந்த கட்சி உடைப்பு அரசியல் தமிழ்நாட்டில் தவெகவால் நடந்திருக்கிறது. இதன் மூலம் இடதுசாரி கட்சிகள் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளின் ஆதரவை மட்டுமே நம்பி விஜய் ஆட்சி இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை உருவாகி இருக்கிறது. பாஜகவின் பக்கம் முதலமைச்சர் ஜோசப் விஜய் சாய விரும்பவில்லை என்பதற்கான அறிகுறிகள் இப்போது தென்பட்டாலும், எதிர்காலத்தில் இவர் உறுதியாக ‘திராவிட மாடல்’ ஆட்சியின் நாயகர் மு.க ஸ்டாலின் போல் உறுதியாக எதிர்த்து நிற்பாரா? என்ற கேள்வியும் எழுகிறது!

பேரவைத் தலைவர் தேர்வு ஒருமனதாக நடந்திருக்கிறது. போட்டியை உருவாக்க திமுக விரும்பவில்லை. சட்டமன்றத்தில் பேசிய அனைத்துக்கட்சி தலைவர்களும் ‘தமிழ், தமிழ்நாடு’ என்ற கருத்தோட்டத்தை மய்யமாக வைத்தே பேசியுள்ளனர். குறிப்பாக எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டின் உரிமைக்கு இந்த அவை ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியதோடு, ‘ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக திமுக செயல்படும், எதிரி கட்சியாக செயல்படாது’ என்று அறிவித்தார். அதுமட்டுமின்றி பதவியேற்பு விழாவில் ‘வந்தே மாதரம்’ பாடப்பட்டதுபோல் ஆளுநர் உரையில் அதை அனுமதிக்க கூடாது என்ற வேண்டுகோளையும் முன்வைத்தார். ‘சனாதனத்தை வீழ்த்துவோம்’ என்ற முழக்கத்தோடு தனது உரையை நிறைவு செய்தார். உதயநிதி ஸ்டாலினின் இந்த பேச்சு உணர்வுபூர்வாக அனைவரையும் ஈர்த்தது.

இந்த அமைச்சரவையில் ஒரு பார்ப்பனர் கல்வித்துறை அமைச்சராக நியமிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. அவர் இனி பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் பிரச்சனைகள் எடுபடாது என்று கூறியிருக்கிறார். அருண்ராஜ், நிர்மல்குமார் ஆகிய தீவிர மோடி ஆதரவாளர்கள் இருவரும் அமைச்சரகளாகி இருக்கிறார்கள். முதலமைச்சர் விஜயின் சோதிடர் நாதன் பண்டிட் என்பவர் முதலமைச்சரின் சிறப்புப் பிரிவு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். ஒரு சோதிடருக்கு அரசுப் பதவி வழங்கியிருப்பது சரிதானா? சட்டமன்றத்தில் விசிகவின் வன்னிஅரசு, தேமுதிகவின் பிரேமலதா ஆகியோர் சுட்டிக்காட்டியதால் அந்த முடிவு திரும்பப் பெறப்பட்டுள்ளது. இவர் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆஸ்தான சோதிடராக இருந்தவர் என்று கூறப்படுகிறது. இந்த சோதிடரின் ஆலோசனைப்படிதான் முதலமைச்சர் பொட்டு வைத்து வருகிறார் போலும்!

மும்மொழி திட்டத்தின் ஒரு பகுதியான "பி.எம்.ஸ்ரீ "திட்டத்தை ஒன்றிய ஆட்சி ஏற்றுக் கொள்ள கட்டாயப்படுத்துகிறது. நீட் தேர்வின் மோசடிகள் அம்பலமாகி வருகின்றன. இந்தப் பிரச்சனைகளுக்கு புதிய ஆட்சி எப்படி முகம் கொடுக்கப் போகிறது? என்பதையும் நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அரசியல் களத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப திமுக கொள்கை இளமையோடு தன்னை புதுப்பித்துக் கொள்ள வேண்டிய அவசியமும் தேவையும் இருக்கிறது என்பதையும் நாம் சுட்டிக் காட்டி ஆக வேண்டும். **பெரியார் கருத்தியலுக்கு எப்போதும் மிக நெருக்கமாகவும் அருகிலும் இருப்பது திமுகவின் தலைமைதான் என்பதில் நாம் உறுதியாகவே இருப்போம்!**

# தேடிவந்த முதலமைச்சர் பதவியை ஏற்க மறுத்தவர் பெரியார்!

**சென்னை மாகாண முதலமைச்சர் பதவி தன்னை நாடி வந்த போது பெரியார் ஏற்க மறுத்தார். நீதிக்கட்சியின் உள்ளேயே பெரியார் பதவி ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தற்கிடையே பெரியார் கடும் போராட்டம் நடத்த வேண்டி இருந்தது. அந்தப் போராட்டம் குறித்து பெரியார் ஈரோட்டில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.**

உள்ளூரில் என்னை மதிக்கும் அளவுக்கு நானில்லை என்பது வாஸ்தவந்தான். அதைப் பொறுத்துத்தானே கழக வேலையும் இங்கு இருக்கும்? இன்று கூட இக்கூட்டத்தில் அரசியல் நிலையைப் பற்றிப் பேச வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். எனக்கு முன்னால் பேசிய நண்பர்களும் அரசியலைப் பற்றியும் பேசினார்கள். ஆனால், நான் அரசியலைப் பற்றி இந்த ஊரில் பேச இஷ்டப்படவில்லை. காரணம், அதைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் இவ்வூரில் மிகமிகச் சொற்பம்!

இந்த ஊரில் பெரும்பாலும் எல்லாம் வியாபாரிகள்: அவர்களுக்கு அடிக்கடி ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்கவும், அதற்கான பூசை, திருவிழா செய்யவுமே காலமெல்லாம் சரியாய் விடுகிறது. அதுவும் கள்ள மார்க்கெட் வியாபாரிகள் தினமும் ஆண்டவனிடம் பேசுவதையே பெரும்பணியாகக் கொண்டுவிட்டனர். இவர்களுக்கு அரசியலைப் பற்றி என்ன கவலை இருக்கப் போகிறது? அரசியல் என்றால் என்ன என்றாவது தெரிய முடியுமா? ஒரு சிலருக்காவது அவ்வித ஆற்றல் இருக்கிறதென்றால், இப்பேர்ப்பட்ட வியாபாரிகளிடம் வேலை செய்து வயிறு வளர்க்க வேண்டிய காரணத்தினால், அவர்களும் அதிகமாகப் பொதுக் காரியங்களில் ஈடுபட முடிவதில்லை. எனவேதான். இவ்வூரில் திராவிடர்கழக வேலை அவ்வளவு ஆமை வேகத்திலிருப்பதும், என்னைப் பற்றி மதிப்பில்லை என்று கூறுவதற்கும் காரணமாகும்.

ஆகவே. அரசியலைப் பற்றியே தெரியாத, பேசினாலும் புரிந்து கொள்ள முடியாதவர்கள் பெரும்பான்மையுள்ள இக்கூட்டத்திலே, நான் அதைப்பற்றிப் பேசாமல், மக்களின் உண்மையான விடுதலைக்கு ஏற்ற சமுதாயத்தைப் பற்றிப் பேசலாமென்று எண்ணுகிறேன். நான் பல ஊர்களில் சுற்றிப் பிரச்சாரம் செய்து வருகிறேன் என்றால், எல்லா இடங்களிலும் ஒரே பேச்சுப் பேசுவது கிடையாது,சற்றுப் பக்குவ மடைந்த, கழகக் கொள்கையில் மிகவும் ஆர்வமுடைய, அல்லது பொது அறிவு படைத்தவர்கள் மிகுதியாக உள்ள ஊர்களில் அரசியலைச் சற்றுக் குறிப்பிடுவது வழக்கம். ஈரோடு போன்ற ஊர்களானால் அதற்கேற்ற பேச்சாகத்தான் பேசுவேன்.

இன்னும் கூறவேண்டுமானால் அரசியலைப் பற்றித்தான் இன்று என்ன வாழ்கிறது! அரசியலை எவ்வளவு இழிதன்மைக்குக் கொண்டுவர வேண்டுமோ அந்தநிலைக்குக் காங்கிரஸ் கொண்டு வந்துவிட்டது. நாங்கள் அரசியலில் போட்டிபோடப் போவதில்லை என்று எத்தனை தரம்தான் கூறினாலும், நமது காங்கிரஸ்காரர்களுக்குப் புரிவதில்லை. இன்று நேற்றல்ல நான் இவ்வாறு சொல்வது. நான் ஜஸ்டிஸ் கட்சிக்கு என்றுதலைவனாய் வந்தேனோ, அன்று முதலே மந்திரி பதவி வகிப்பதற்கு எதிர்ப்பாயிருந்து வந்திருக்கிறேன்.

ஆனால், நீங்கள் கேட்கலாம்; என்னய்யா, நீங்களே உங்களைப் பற்றிப் பெருமையாய்ப் புகழ்ந்துகொள்கிறீர்களே; உங்களுக்குப் பதவி கொடுக்க யார் அழைத்தார்கள்; வேண்டினார்கள்? என்பதாக. தோழர்களே! கனம் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் தமது மந்திரிசபையை இராஜிநாமா செய்துவிட்டு வீடுபோய்ச் சேருவதற்கு முன்னமேயே, கவர்னர், ஜஸ்டிஸ் கட்சியினரை மந்திரிசபை ஏற்படுத்தும்படி வற்புறுத்தி அழைத்ததை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். அப்பொழுது உதகையிலே இருந்த கவர்னர், நமது காலஞ்சென்ற பன்னீர்செல்வம் அவர்களைக் கூப்பிட்டு, உங்கள் கட்சித் தலைவருக்கு ஆங்கிலம் நன்றாகப் பேசவும் எழுதவும் தெரியுமா?' என்று கேட்டாராம். அதற்குச் செல்வம் அவர்கள் கவர்னரை நோக்கி,ஏன் இவ்வாறு கேட்கிறீர்கள்?" என்று வினவ 'அடுத்த மந்திரிசபை உங்கள் கட்சியார்தான் நிறுவ வேண்டியிருக்கும்; அப்போது கட்சித் தலைவர் தானே பிரதமராயிருக்க வேண்டும்! அதற்காகத்தான் கேட்டேன்' என்றாராம்.

'அவருக்கு ஆங்கிலம் தெரிகிறதோ இல்லையோ, முதலாவதாக அவர் பதவியை ஒப்புக்கொள்ளுகிறாரா, இல்லையா என்பதை அறிந்துகொள்ள வேண்டும்' என்று செல்வம் அவர்கள் கூறினாராம். நீங்கள் சட்ட வரம்புக்கு உட்பட்டு இயக்கத்தை நடத்துபவர்கள் தானே; பதவி வகிப்பதில் என்ன தவறு இருக்கிறது?' என்று கேட்டாராம் கவர்னர் எப்படியிருந்தாலும், பதவியேற்கும் விஷயம் மட்டும் கட்சித் தலைவரைக் கலக்காமல் கூற முடியாது என்று அவர் கூறினாராம். பிறகு, என்னிடம், கவர்னர் கூறியதைச் செல்வம் கூறிவிட்டார் என்பதையறிந்து கட்சிப் பிரமுகர்களும் எனக்குக் கூறியதுடன் பதவியையும் ஒப்புக் கொள்ளமென்று ஜாடையாகக் குறிப்பிட்டனர். நான் பதவியேற்றுக்கொள்வ தென்பது முடியாது என்று அவர்களிடம் கூறியதோடல்லாமல், அடுத்து சென்னையில் இராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் அரண்மனையில் 1939 கட்சியின் நிர்வாகக் கமிட்டியையும் கூட்டி, மந்திரி பதவி ஏற்பது கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றினேன். ஆனாலும் அக்கூட்டத்தில் தீர்மானம் சுலபமாக நிறைவேறென்று நினைக்கிறீர்களா? அன்று நிர்வாகக் கமிட்டியிலிருந்த பெரிய பெரிய சீமான்கள், ஜமீன்தார்கள் எல்லாம் எதிர்த்தார்கள். எனது கருத்திற்கு ஆதரவாக ஒரு சில சாதாரணத் தோழர்கள் தாம் இருந்தார்கள். ஓட்டுக்கு விட்டிருந்தால் பதவியேற்புக்கு ஆதரவாகப் பெருவாரியாக ஓட்டுக் கிடைத்திருக்கும். எனினும், கட்சித்தலைவன் என்கின்ற முறையில் நானே தீர்மானத்தைப் பிரேரேபித்தேன் . இதைக் கண்டதும் அவர்கள் விழிக்கலானார்கள். நமது பன்னீர்செல்வத்தை எழுந்து பேசுமாறு, பதவி ஆதரிப்பாளர்கள் செய்தனர். நான் பன்னீர்செல்வம் அவர்களையும், இனி பேசுவதற்கு இடமில்லை; தயவுசெய்து உட்காருங்கள் என்று கூறி விட்டேன். பிறகு எனக்கு வேண்டியவரான அதாவது அவர் சொல்லைத் தட்டமாட்டேன் என்ற பாத்தியதையுடைய நண்பர் சவுந்தரபாண்டியன் அவர்களை விட்டுப் பேசச் சொன்னார்கள். அவரும் எழுத்து ஏதோ பேச் வாயெடுத்தார்.' தாங்களும் ஒன்றும் பேச வேண்டிய அவசியமில்லை என்றேன். அதற்குப் பாண்டியன்,' இப்படி நீங்கள் கூறக்கூடாது; தயவுசெய்து என் வார்த்தையைக் கேளுங்கள்' என்றார்.

நான். 'தங்களிடமும் அவ்விதம் கூறும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிட்டது பற்றி வருந்துகிறேன். தயவுசெய்து உட்காருங்கள்' என்றேன். அவரும் உட்கார்ந்துவிட்டார். இவர்களிரண்டு பேருடைய முயற்சியும் தோல்வியுறவே, பதவி ஆதரிப்பாளர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதும், விழிப்பதுமாயிருந்தார்கள். உடனே ஓட்டுக்கு விட்டேன். ஏதோ என் சொந்த தாட்சண்யத்துக்காகச் சிலர் கையைப் பாதி உயர்த்துவதும், பாதி கீழே விடுவதுமாய் இருந்தார்கள் என்றாலும், நான் துணியை மேலே உதறிப் போட்டுக் கொண்டு பேசியதைக் கண்ட அவர்கள் கடைசியிலே தீர்மானத்தை நிறைவேற்றித் தந்தார்கள். உடனே ஒன்றும் பேசாமல் புறப்பட்டு விட்டேன். ஏன் அப்படி வந்து விட்டேன் என்றால், பதவி ஏற்பை எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ளச் செய்துவிடலாம் என்று மிக முன்னெச்சரிக்கையான காரியங்களை நடத்தி ஏமாந்த தோழர்களின் முகத்தைப் பார்க்க எனக்கே பரிதாபமாயிருந்தது. தோழர்களே! இப்படி மந்திரிசபையை ஏற்க மறுத்தது மட்டுமல்ல, பின்னர், சட்டசபைத்தேர்தலுக்கு நிற்பதும் கூடாதென்று சேலம் மாநாட்டிலே தீர்மானித்துள்ளோம். இதை ஏன் கூறுகிறேன் என்றால் நாங்கள் அரசியல் வேலையில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதுடன், காங்கிரஸ் காரருக்கு அரசியல் விரோதியாகவும் இல்லை என்பதை விளக்கவேயாகும்.

– குடிஅரசு 14.05.1949

# பதவிக்காக இருப்பவர்களை கொள்கைவாதிகளாக மாற்ற வேண்டும்!

***தற்போது நிலவும் அரசியல் சூழல் குறித்து கழக தலைவர் "கொளத்தூர் மணி" அறிக்கை:***

"தமிழக வெற்றிக் கழகத்துக்கு" பெரும்பான்மை கிடைக்காத நிலையில், ஆளுநர் ஒன்றிய ஆட்சியின் தூதுவராகி அதிக பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியை ஆட்சி அமைக்க மறுத்து வருகிறார். ஆளுநர் உருவாக்கும் இந்த குழப்பத்தால் பல்வேறு அரசியல் குழப்பங்கள் உருவாகி வருகின்றன. இது தொடர்பாக அதிர்ச்சியான செய்தி ஒன்று வெளி வந்திருக்கிறது. மக்களால் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்ட அஇஅதிமுகவை ஆட்சி அமைக்க அனுமதித்து அந்த ஆட்சிக்கு திமுக வெளியிலிருந்து ஆதரவைத் தெரிவிக்க முடிவு செய்து இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.இது உண்மையாக இருந்து விடக்கூடாது என்று நாம் அஞ்சுகிறோம்.

இந்திய அரசியலில் கொள்கைக்கான இலட்சியத் தலைவராக மு.க.ஸ்டாலின் உயர்ந்து நிற்கிறார். மாநில அடையாளங்களை அழிப்பதற்கு ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக சமரசம் இன்றி அவர் போராடுகிறார். இந்தியாவிலேயே மாநிலங்களுடைய உரிமைக்குப் போராடும் ஒரே தலைவராக இன்றைக்கு பல்வேறு கட்சிகளிலும் அவர் மதிக்கப்படுகிறார். மக்கள் ஆதரவோடு அதிக இடங்களை பெற்று இருக்கிற த.வெ.க ஆட்சி அமைய தடையாக இருக்க மாட்டோம் என்றும், நிலையான ஆட்சி தமிழ்நாட்டில் அமைய வேண்டும் என்றும், ஆறு மாத காலம் இந்த ஆட்சியின் செயல்பாடுகளைக் கூர்ந்து கவனிப்போம் என்றும் மிகுந்த அரசியல் நேர்மையோடு தமிழக முதலமைச்சர் வெளியிட்ட அறிக்கை பலராலும் பாராட்டப்படுகிறது.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அஇஅதிமுகவில் குழப்பங்கள் உருவாகி கட்சி பல பிரிவுகளாகப் பிரிந்து நின்றது. அப்போது வலிமையான உறுப்பினர்களின் எண்ணிக்கையோடு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் நினைத்திருந்தால் ஆட்சியைக் கவிழ்த்து இருக்க முடியும். ஆனால் அப்படி செய்வதற்கு அவர் தயாராக இல்லை முழுமையாக ஆட்சி காலம் முடியும் வரை காத்திருந்தார். அதே பார்வையோடு தான் இப்போதும் எதிர்க்கட்சியாக திமுக செயல்படும் என்று சரியான முடிவை எடுத்துள்ளார். ஆனால் இப்போது எடப்பாடி பழனிச்சாமியை முதல்வர் ஆக்கி திமுக வெளியிலிருந்து ஆதரவு தரும் நிலையை எடுத்தால் எதிர்காலத்தில் நிகழக்கூடிய பாதிப்புகளையும் கருதிப் பார்க்க வேண்டும்.

திமுக எடப்பாடிக்கு அளித்து வரும் ஆதரவை கொள்கை அடிப்படையில் திரும்பப் பெற்றால்கூட பிறகு அதிமுகவும் தவெகவும் கூட்டணி சேரும் நிலைதான் உருவாகும். மற்றொரு கசப்பான உண்மையையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். தற்போது திமுகவில் கொள்கைக்காக பதவிகளில் இருப்பவர்களை விட அதிகாரத்திற்காக பதவிகளில் இருப்பவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள்.இப்படி அதிகாரத்திற்காக இருக்கிறவர்கள் தான் இப்படி ஒரு விபரீத யோசனைகளை முன் வைக்கிறார்கள் என்று கருதுகிறோம். அதிகாரத்திற்காக பதவிகளில் இருப்பவர்களை கொள்கைக்காக இருப்பவர்களாக மாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் திமுகவுக்கு இருக்கிறது. இந்தியாவில் கொள்கை அடையாளத்தோடு நேர்மையான அரசியல் பிம்பத்தோடு நிமிர்ந்து நிற்கும் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிம்பம் குலைந்து விடக்கூடாது என்ற கவலையோடு இதை எழுதுகிறோம். மு.க.ஸ்டாலின் உறுதியாக இந்த விபரீத முடிவுகளை எடுக்க மாட்டார் என்ற உறுதியான நம்பிக்கை நமக்கு உண்டு."

(**குறிப்பு:** இடதுசாரிகள், விசிக ஆதரவுடன் தவெக ஆட்சி அமைத்துள்ள நிலையில் அதற்கு முன்பாக ஊடகங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் வெளியிடப்பட்டது இந்த அறிக்கை. கழகத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக வெளியிடப்பட்ட அறிக்கை என்பதால் கழக இதழில் பதிவு செய்யப்படுகிறது.)

**– கொளத்தூர் மணி,**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.**
**08.05.26**

## பாஜக ஊடுருவல் முறியடிப்பு!

திமுக தலைவர் மு.க ஸ்டாலின் அவர்கள் உருவாக்கிய மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு விஜய் கட்சி ஆட்சி அமைக்க தேவையான 118 இடங்களை பெற்றிருக்கிறது. தேர்தல் களத்தை டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்குமான போராட்டமாக கட்டமைத்த திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தாலும் டெல்லியின் ஊடுருவலை தோல்வியடைய செய்திருக்கிறார். விஜய் கட்சியை பயன்படுத்தி தமிழ்நாட்டில் கால் பதிக்கலாம்; அதற்கு ஆளுநரை பயன்படுத்தலாம் என்ற சதி திட்டத்தை தமிழ்நாடு முறியடித்திருக்கிறது. முதல்வர் பதவியை ஏற்க இருக்கும் விஜய் முழுமையாக பாஜக எதிர்ப்பு அணிகளின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறார். காங்கிரஸ் கட்சி மட்டும் தான் துரோக சக்தியாக மாறி உள்ளது. மற்றபடி சிபிஅய், சிபிஎம், இடதுசாரிகளும், விடுதலை சிறுத்தை கட்சியும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும் திமுக கூட்டணியின் நட்பு சக்தியாக இருந்து கொண்டு பாஜக ஊடுருவலை தடுப்பதற்கு வெளியில் இருந்து ஆதரவு தரும் மிகச் சிறப்பான முடிவை எடுத்திருக்கின்றன. இதைத் தான் ஏற்கனவே நாமும் வலியுறுத்தி பதிவிட்டோம்.

முதன்மையான எதிரி இந்துத்துவாவை தனிமைப்படுத்தும் நோக்கத்தோடு திமுக தலைவர் மேற்கொண்ட அணுகுமுறை வரலாற்றுச் சிறப்புமிக்கது. புதிய ஆட்சியை ஆளுநர் அனுமதிக்க வேண்டும்; இதுகாலத்தின் கட்டாயம் என்றும்; ஆளுநர் காலம் தாழ்த்தக்கூடாது என்றும் வலியுறுத்தினார் மு. க.ஸ்டாலின் திமுக தலைவர் மட்டுமல்ல; தமிழ்நாட்டு மக்களின் தலைவர் என்ற நிலைக்கு அவரை இந்த கருத்து உயர்த்தி விட்டது. பாசிச கருத்தை மிகவும் மலினப்படுத்தி அரசியல் புரிதல் இல்லாமல் பாயாசமாக கேலி செய்த விஜய்; பாசிசத்தின் அடக்குமுறைகளை இப்போதாவது உணர்வாரா? என்பது தெரியவில்லை! கொள்கைப் பார்வையில் முதன்மை முரண்பாடுகளை முன்னிறுத்தி அரசியலை அணுகும் தெளிவை வேறு எந்த மாநிலத்திலும் எதிர்பார்க்க முடியாது!

~ விடுதலை இராசேந்திரன்
09.05.2026

# பெரியாரின் இந்தி எதிர்ப்பை இழிவு செய்தவர் ஜீவா!


## ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் (16) - கொளத்தூர் மணி

“ஈரோட்டுப் பாதை சரியா?” என்ற நூலில் ஜீவா அவர்கள் பெரியார் மீது சுமத்தியுள்ள விமர்சனங்களுக்கும் (பழிசுமத்தல் என்ற சொல்லைக் கூட தவிர்க்கிறேன்). தோழர் ஜீவானந்தம் மீதான மிகைமதிப்பீட்டுக்கும் பதில் அளிப்பதே எனது நோக்கம்

“ஈரோட்டுப் பாதை சரியா?” நூலில் தோழர் ஜீவா எழுதியுள்ளவற்றுள் நினைவூட்டலுக்காக சில **“நாகரிக”** சொற்றொடர்கள் கீழே:

**ஜீவாவின் இழிவான அவதூறுகளை புறந்தள்ளிவிட்டுதான் பெரியார் இயங்கி இருக்கிறார்; ஜீவாவோடு இறுதி நாட்கள்வரை பழகியும் வந்திருக்கிறார்**

“ஜஸ்டிஸ் கட்சியுடைய குற்றவாளித்தனத்தை மறைத்தார். பொதுவுடைமை இயக்கமல்ல என்று அரசாங்கத்தை நம்பச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிற, எழுதுகிற அளவுக்குச் சாக்கடையில் சறுக்கி விழுந்தார். தான் உயிரோடு இருக்க (யாருக்காக?) பிற்போக்குக் கும்பல்களின் யோசனைப்படி **ஈவெரா யார் காலையும் பிடிக்கத் துணிந்தார்**.”



“சென்னையில் ‘நால்வர் சந்திப்பு’ நடந்தது (1-8- 1927). அடுத்த வார குடிஅரசில் வெளியான பிராமணியச் சடங்கை விலக்கியவர் பட்டியலில் ஈ.வெ.ரா., திரு.வி.க., டாக்டர் நாயுடு, ஆர்.கே.ஷண்முகம் ஆகிய நால்வரின் பெயர்களும் முன்வரிசையில் இடம் பெற்றன. இவ்வாறு காங்கிரஸ்காரர்களோடு இணைந்து, சமூகச் சீர்திருத்தத்திற்கு ஆதரவு தேடுவதாகக் காட்டி, காங்கிரஸ் ஒழிப்பு வேலைக்கு **மறைமுகமாகப் பணம் திரட்ட முனைந்தார் ஈ.வெ.ரா.**”

‘‘1935 மார்ச் 10ஆம் நாள் ‘குடிஅரசு’ மூலம் **மானங்கெட்டத்தனமான ஒரு அறிக்கையை வெளியிட்டார்.**”

“1942 வாக்கில் ப.ஜீவானந்தம் நம் ஆள்தான் என்றும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தமக்கும் வித்தியாசம் இல்லை என்றும் ….. …. …. வாலிபர்களைத் திராவிடர் கழகம் வலை வீசிப் பிடிக்க முயன்றது”. “இந்தச் சந்தர்ப்பத்தில் மாகாண சட்டசபை தேர்தல் வந்தது. **என்னைப் போன்றவர்களுக்கும் கூட ஓட்டுப் போடாமல் நடுநிலை வகித்தனர் திராவிடர் கழகத்தார்.**”

“இங்கிலாந்தில் லான்ஸ்பரி என்ற பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர் ஆற்றிய உரைக்கு விடை கூறும் முறையில் ஈவெரா பேச சந்தர்ப்பம் கிடைத்தது. **தோழர் சக்லத்வாலா எழுதிக் கொடுத்த பிரசங்கத்தை ஈவெரா படித்தார்.**”

“ராஜாஜி இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கினார். வெறும் வாயையே மென்று கொண்டிருந்த கிழவிக்கு ஒரு வாய் அவல் கிடைத்தது. ஈவெரா சந்தர்ப்பத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தார். கட்டாய இந்தியை எதிர்த்து காங்கிரஸ் மந்திரி சபைக்கு ஓரளவுக்குத் தொந்தரவு கொடுக்க முடிந்தது”.

“முதலில் இந்தி எதிர்ப்பு வீரர்களை எடுத்துக் கொள்வோம். ……… …………. ……… ஈ.வெ.ரா எந்த சாக்கிலும் காங்கிரசைத் திட்டி திட்டியே சாவதென்ற தீர்க்கமான தீர்மானத்திற்கு வந்து அந்த ‘புனித’ கைங்கரியத்திலே தனது ‘பொன்னான’ நேரத்தைப் போக்கிக் கொண்டிருப்பவர்… ……… …….. ……… **ஏகாதிபத்தியத்தின் தாஸானுதாசர். ஏகாதிபத்திய ஏஜமானர்களின் மேஜைகளிலிருந்து விழும் ரொட்டித் துண்டுக்கு நாக்கில் ஜலம் ஊற அண்ணாந்து நிற்கும் அரசியல் பிற்போக்காளர்.**”

தோழர் ஜீவாவின் புனைவுகளையும், பொருந்தா வாதங்களையும், உண்மையல்லாத வீரப்பிரதாபங்களையும் பற்றி இதுவரை விளக்கி வந்திருக்கிறோம்; இன்னும் எழுதுவதற்கும் திறனாய்வு செய்வதற்கும் ஏராளம் இருந்தாலும் இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறோம்.

சீமானுடன் ஜீவாவை ஒப்பிட்டு பேசியதற்காக சினமுற்று சீறினார்கள். சீமான் மீது சுமத்தப்பட்ட தனிமனித ஒழுக்கம் குறித்த குற்றச்சாட்டுகள் ஜீவா மீதும் சுமத்தப்பட்டுள்ளன. நம்மால் எடுத்துக் கூற முடியும் என்றாலும் அந்தத் திறனாய்வு நமது நோக்கம் அல்ல!

இதுவரை வைக்கப்பட்டுள்ள விளக்கங்களுக்கும், திறனாய்வுகளுக்கும் ஏதேனும் விளக்கமும், வழக்கமான சுடுமொழி பின்னூட்டமும் வருமேயானால் அதற்கும் விளக்கம் கொடுக்கவும் நாம் தயாராக இருக்கிறோம்.

பெரியார் என்ற அந்த மாமனிதர் ஜீவாவின் அந்த நூலைப் படித்திருக்க மாட்டார் என்று நாம் யாரும் நம்ப மாட்டோம்; ஆனால் ஜீவாவின் இழிவான அவதூறுகளை புறந்தள்ளிவிட்டுதான் பெரியார் இயங்கி இருக்கிறார்; ஜீவாவோடு இறுதி நாட்கள்வரை பழகியும் வந்திருக்கிறார்; தேர்தலிலும் அவருக்கு ஆதரவளித்துள்ளார். ஆனாலும் ஒரு பயிற்சி வகுப்பில் தோழர்கள் கேட்ட கேள்விக்கு விடை அளித்ததையே பொறுத்துக் கொள்ள முடியாமல் சொகுசு பொதுமையர் ஒருவர் பூர்ஷ்வா பார்வை என்கிறார்; கிண்டல் சிரிப்பு என்கிறார்.

*Zeal of the new convert* (புதிதாக மதம் மாறியவர்களின் உற்சாக சேட்டைகள் அதிகமாகவே இருக்கும். அப்படி பல்வேறு ’புரட்சிகர’ அமைப்புகளில் இடம்பெற்று ’புரட்சிகளை’ முழுமையாக நடத்தி முடித்துவிட்டு, அண்மையில் தேர்தல் அரசியலுக்காக இந்திய பொதுவுடைமைக் கட்சிக்குள் வந்திருக்கும் ’ஒரு முழு புரட்சியாளர்’ இப்படி பதிவிட்டிருக்கிறார். என்னை உளவுத்துறைக்கும் ‘ரா’வுக்கும் இரகசிய உளவாளி என்று தனது காதில் வழியும் மூளையில் இருந்து கண்டுபிடித்து கூறியிருக்கிறார். ஜீவாவின் மீது விமர்சனம் வைத்தாலே அது உளவுத்துறையின் சதியாம்!.

அதேபோல் ஜீவாவுக்காக மற்றொருவர் சீறிப்பாய்ந்தார். அவர் இப்போது திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர். குறைகூற முடியாத குணக்குன்று ஜீவாவை எப்படி விமர்சிக்கலாம்? என்று கொதித்து எழுந்த அவர் கொளத்தூர் மணி ’அற்ப மானுட பதர்’ ‘செக்கு எது? சிவலிங்கம் எது? என்று தெரியாயத பிராணி’ என்று தனது ’தத்துவமொழியில்’ கழிவைக் கொட்டியிருக்கிறார்.

கடந்த 16 வாரங்களாக ஜீவாவின் உண்மை முகத்தை கிழித்துக்காட்டி ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளோம். சீமான் பெரியார் மீது சுமத்திவரும் இழிவுகளையும் அவதூறுகளையும் விட மிஞ்சி நிற்கிறது ஜீவாவின் எழுத்தும் பேச்சும். பெரியார் மீதான ஜீவாவின் இந்த கீழ்த்தரமான கருத்துக்களை நம்மை குற்றம் சாட்டுகிறவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? நாம் சுட்டிக்காட்டிய ஜீவாவின் பொய்மையை, நேர்மையின்மையை அவர்களால் மறுக்க முடியமா? இதற்கு ஏதேனும் விடைகூற முன்வந்தால் அதற்கும் விளக்கம் அளிப்பதற்கு நாம் தயராகவே இருக்கிறோம் என்ற உறுதியான அறிவிப்புடன் இந்த தொடரை நிறைவு செய்கிறோம்.

**-நிறைவு**

# கலையின் வழியாக கலகம் செய்த கும்மம்பட்டி!

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். திண்டுக்கல் மாவட்டம் கும்மம்பட்டி குறித்து விவரிக்கிறது இக்கட்டுரை தொடர்.**

1948-ஆம் ஆண்டு, ஓமந்தூர் ராமசாமி தலைமையிலான அரசு, சென்னை மாகாணப் பள்ளிகளில் இந்தியை மீண்டும் கட்டாயப் பாடமாக்கியது. நீறுபூத்த நெருப்பாக இருந்த முதல் இந்தி எதிர்ப்புப் போரின் உணர்ச்சிப் பிழம்புகள் மீண்டும் வெடிக்கத் தொடங்கின. அந்த உணர்வுகளுக்குத் தப்பாத ஒரு கிராமம் கும்மம்பட்டி. திண்டுக்கல்லில் இருந்து 11 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிற்றூர். அந்த ஊரைச் சேர்ந்த கு.சி.பழனிச்சாமி, எந்நேரமும் கையில் பெரியார், அண்ணா நூல்களை வைத்திருப்பவர். பத்தாம் வகுப்பு மாணவரான அவர், சக மாணவர்களோடு உரையாடும்போதுகூட தமிழ், தமிழ்நாடு, இந்தி எதிர்ப்பு பற்றியதாகவே இருக்கும். ‘திராவிடப் பண்ணை’ நூல்களை வாங்கி, தான் படிப்பதோடு மட்டுமல்லாமல், சக மாணவர்களுக்கும் கொடுத்து படிக்கச்சொல்லி, அதில் இருந்த கருத்துகளை விவாதிப்பார்.




இதை முறைப்படுத்துவதற்காகத் தன் நண்பர்களுடன் இணைந்து 1949-இல் ‘கலை மன்றம்’ ஒன்றைத் தொடங்கினார். “கலை என்பது மக்களை மகிழ்விப்பதற்கு மட்டுமல்ல; அவர்களது மனங்களில் சிந்தனையைக் கிளற வேண்டும்” என்ற அண்ணாவின் கருத்துக்கு ஏற்ப செயல்பட்டது, இந்தக் கலை மன்றம். ராமாயணம், மகாபாரதக் கதைகள்தான் அதுவரை அங்கு மாணவர்களுக்குப் பாலபாடம். கோயில் திருவிழாக்களில் வட்டக்கும்மியும், ஒயிலாட்டமும் பிரபலம். இந்த நிலையில், 1949-ஆம் ஆண்டு திண்டுக்கலில் நடைபெற்ற ‘பேச்சுரிமை, எழுத்துரிமை’ மாநாட்டில் பேசிய அண்ணா, ‘கிராமப்புறக் கலைகளில் புதிய கருத்துகளை இணைத்து நம் கொள்கைகளைப் பரப்ப வேண்டும். பாடல்கள் எழுத வேண்டும். பாடலின் பொருள் மக்களுக்குப் புரியும்படி எழுத வேண்டும்’ என்று அறிவுறுத்தி விட்டுச்சென்றார். ஏற்கெனவே, கலை மன்றத்தின் வாயிலாக நாடகம், சொற்பொழிவு, பொதுப்பணி பயிற்சிகளைத் தொடங்கியிருந்த கு.சி. பழனிச்சாமிக்கு, அண்ணாவின் அறிவுரை இன்னும் ஈர்ப்பைத் தந்தது. பகுத்தறிவுக் கருத்துகளை எடுத்துரைக்கும் வகையில் ஒயிலாட்டப் பாடல்கள் பலவற்றை அவரே எழுதினார்.

ஒயிலாட்டத்தின் மூலம் பகுத்தறிவு உணர்வையும் தமிழ்ப்பற்றையும் ஊட்டி வளர்த்தது கலை மன்றம். அதுபோக, அப்பகுதி மாணவர்கள் கம்பரின் ராமாயணத்தை அறியும் முன்னரே அவர்களிடத்தில் அண்ணாவின் ‘கம்பரசத்தை’ச் சேர்த்துவிட்டார். கீதையை அறியும் முன்னரே ‘ஆரிய மாயை’யை அறியச் செய்து விட்டார். – சேரன்மாதேவி குருகுல சம்பவத்தைக் கொண்டுசேர்த்து விட்டார். இப்படி பகுத்தறிவால் வார்க்கப்பட்ட மாணவர்கள் உருவாக்கியது என்பதால், ‘கலை மன்றத்தினர் என்றாலே சாமி இல்லை என்று சொல்லும் கருப்புச் சட்டைக்காரர்கள்’ என்றே ஊரார் கருதினர். மக்கள் மனத்தை ஈர்ப்பதற்காகப் பொதுப்பணிகளிலும் ஈடுபடுத்திக்கொண்டது கலை மன்றம்.

ஆறு மாதங்களுக்கு செழிப்பான நீரோட்டம், ஆறு மாதங்களுக்கு கடும் வறட்சி என்பதுதான் கும்மம்பட்டியின் நிலைமை. வறட்சிக் காலங்களிலும் ஊர் மக்களுக்குக் குடிநீரை உறுதிசெய்ய வேண்டு மென்பதற்காக, வறண்டு கிடந்த பாண்டியர் காலத்து பொதுக்கிணற்றைத் தூர் வாரியது கலை மன்றம். ஊராரின் பாராட்டைப் பெற்று, மக்களிடையே மன்றத்திற்கு ஒரு நெருக்கம் ஏற்பட்டது. அதன்பிறகு, ஊரில் தீப்பிடித்தால் அணைப்பதாக இருந்தாலும் சரி, திருடர்களை விரட்டிப் பிடிப்பது என்றாலும் சரி, கலை மன்றத்தினரே முன் நின்றார்கள். அதனால் மக்களும் மன்றமும் ஒன்றாகிப் போனதுடன், மன்றத்தினர் முன்வைத்த பகுத்தறிவுக் கருத்துகளுடனும் மனத்தளவில் ஒன்றிணையத் தொடங்கினர் கும்மம்பட்டி மக்கள்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# 1967-ல் திமுக வெற்றியின் போது பெரியார் கூறியது என்ன?

*ஆட்சி மாற்றங்களை பெரியார் இயக்கம் எப்படி அணுக வேண்டும் என்று பெரியார் தெளிவுபடுத்தி இருக்கிறார். 1967-ல் திமுக விடம் காங்கிரஸ் தோல்வி அடைந்த போது பெரியார் விடுத்த அறிக்கையில் இருந்து ஒரு பகுதி.*


எப்படியோ இன்று தமிழ்நாட்டில் காங்கிரஸ் தோல்வி அடைந்து மாற்றான் எதிரி ஆட்சியாகவே ஏற்பட்டுவிட்டது; அந்தப்படியே எதிரிகளும் நினைத்து மகிழ்ச்சி அடைந்தார்கள்; நானும் நினைத்துக் கவலைப்பட்டேன் ; துக்கப்பட்டேன்; என்னமோ நமது நல்ல வாய்ப்பின் காரணமாய், எதிரியின், புத்தி இல்லாத தன்மையின் காரணமாய்ப் பெரிதும் தங்களால், தங்கள் முயற்சியால் ஏற்பட்ட ஆட்சியை அனுபவிக்க வாய்ப்பு பெறாமல் ஒரே முழுக்கில் மண்ணெடுக்க ஆசைப்பட்டு ஆட்சியாளர்களை சங்கடமான நிலைக்குத் கொண்டுவர ஆசைப்பட்டதால் ஆட்சியாளர் நேர்மையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்ததும், ஆட்சியாளர்களை ஒழிக்கத் திட்டம் போட்டு விட்டார்கள். இது நமக்கு ஒரு நல்வாய்ப்பாய் வாய்த்தது என்று கருதி இந்த ஆட்சியை விழாமல் செய்து அது உள்ளவரையிலாவது மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படும்படி செய்ய முடியுமா? என்று சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பெரிதும் பார்ப்பனர் முயற்சியால் ஆட்சி தி.மு.க.வுக்குக் கிடைக்கும் வாய்ப்பு வந்தது என்றாலும் தி.மு.க. பார்ப்பனர் அல்லாதார் என்பதையும், அதிலும் அவர்கள் பகுத்தறிவுவாதிகள் என்பதையும், இவர்கள் பதவிக்காக பாப்பனர் ஆதரவைத் தேடினார்களே ஒழிய பார்ப்பனர்களுக்கு அடிமையாக இருக்க அல்ல என்பதையும் பார்ப்பனர் மறந்து தடபுடலாக அடிமை கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். தி.மு.க. பார்ப்பனர்களை வாழவைக்க என்று பதவியை விரும்பினவர்கள் அல்லவே! அவர்களுக்குப் பதவி வேண்டும். அதுவும் நிலைக்க வேண்டும்; தொல்லை இல்லாமலும் நடைபெற வேண்டும் என்கின்ற எண்ணமுடையவர்கள்!

அதோடு தி.மு.க.வுக்கு நாட்டில் பார்ப்பனர் செல்வாக்கு எவ்வளவு பார்ப்பனரல்லாதார் செல்வாக்கு சக்தி எவ்வளவு என்பதும் தெரியும். பார்ப்பனருக்குப் பத்திரிகைகள் அனுகூலம்; கோர்ட்டுகள் அனுகூலம்; அயோக்கியத்தன்மை பொருந்திய வக்கீல் கூட்டம் அனுகூலம் உண்டு. ஆனால் பார்ப்பனரல்லாதவர்களுக்கு இவற்றைப் பற்றிக் கவலைப்படாத மக்கள் ஏராளமானபேர் இருக்கிறார்கள்; கிளர்ச்சிக்காரர்கள் இருக்கிறார்கள்! பார்ப்பனர்களுக்குக் கிளர்ச்சிக்கு ஆட்கள் வேண்டுமானால் பார்ப்பனரல்லாத ஆட்களைக் கொண்டுதானே கிளர்ச்சி செய்ய வேண்டும்? இந்த நிலையில் மோதல் ஏற்பட்டால் யார் வெற்றி அடைய முடியும்? இதை ஆட்சியாளர்கள் சிந்திக்கமாட்டார்களா?

*1927-சுயேச்சை(காங்கிரஸ்) மந்திரி சபை ஏன் கவிழ்ந்து சுயமரியாதை மந்திரி சபை ஆயிற்று? 1937-ல் புயல்போல் வெற்றி பெற்ற காங்கிரஸ் மந்திரிசபை கவிழ்ந்து ஏன் 'பெரியார்' சொல்லுகிறபடி நடக்கிற (ஜஸ்டிஸ்) அட்வைசர் மந்திரிசபை ஆயிற்று? 1947-ல் காங்கிரஸ் (பிரகாசம்) மந்திரிசபை மாறி இராமசாமி ரெட்டியார் மந்திரி சபை ஆயிற்று? பிறகு 1954-ல் இராஜாஜி மந்திரிசபை மாறி காமராஜர் மந்திரிசபை ஆயிற்று?*

அப்படிப் போல்தானே 1967-லும் பார்ப்பனர் வெற்றிபெற்ற மந்திரிசபை லேபிள் மாற்றியதுபோல் பார்ப்பனரல்லாதார் மந்திரி சபை ஆகிறது. இவ்வளவுக்கும் நான் பங்காளியாக சம்பந்தப்பட்டவனுக்கு, பாடுபட்டவனுக்கு இருந்து வந்திருக்கிறேன். என்னாலாயிற்றா? இயற்கையாக ஆயிற்றா? என்பது வேறு வேறு விஷயம், ஆனால் இவற்றிற்கு என் பங்கு உண்டு என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த நிலையில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்னை தி.மு.க. மதித்தாலும் சரி, மதிக்காவிட்டாலும் சரி. காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் மந்திரிசபை என்னை மதித்ததா? அழைத்ததா? புன்முறுவலாவது காட்டிற்றா? 'பட்டுச்சேலையை இரவல் கொடுத்து விட்டு ஜமக்காளம் எடுத்துக் கொண்டே இரவல் வாங்கியவளின் பின்னால் திரிந்து தொடர்ந்தது'போல், அதாவது பட்டுச்சேலை, அதை இரவல் கேட்டார்கள்; கொடுத்து விட்டோம்; அதை வாங்கிக் கட்டிக் கொண்டவள் நினைத்த பக்கத்தில் போய் உட்கார்ந்தாளேயானால் சேலை அழுக்குப் பட்டுப் போகும்; கறைப்பட்டுப் போகும்; எண்ணெய் பட்டுப் போகும்; கட்டிக்கொண்டவளுக்கு கவலை இல்லை; ஊரார் வீட்டு சேலைதானே என்று அலட்சியமாய் உட்காருவாள். கவலை சேலைக்காரிக்குத்தானே இருக்கும், ஆதலால் வாங்கிக்கொண்டவளின் பின்னாலேயே சொந்தக்காரி ஒரு ஜமக்காளம் எடுத்துக்கொண்டு அவள் பின்னாலேயே போய் அவள் உட்கார ஆரம்பித்தால் உடைமைக்காரி உடனே ஜமக்காளத்தை விரிப்பாள் அதுபோலவே நமது கதி; மந்திரி பதவி தி.மு.க.வுக்கு கவுரவம், அதன் பலம் நமக்கு! நம்முடையது! அது கறைபடாமல் அழுக்குப்படாமல் பாதுகாக்க வேண்டிய காரியம் நமக்கு இருக்கிறது; அது எல்லோருக்கும் இருக்காது. உடைமைக்காரி ஆகிய நமக்கு தி.க. காரர்களுக்குத்தான் இருக்க முடியும்.



மற்றவர்களோ அது நமக்கு வராதோ என்கிற கவலைக்காரர்கள் ஆகத்தானே இருக்கிறார்கள், பார்ப்பனர் கம்யூனிஸ்ட், பார்ப்பனர் சுதந்திரா மற்றும் பல பார்ப்பனர் பல கட்சிப்பேரால் இருக்கிறார்கள். கடைசியாக யாராலாவது கவிழ்ந்து மறுபடியும் நம்ம கைக்கு வராதா என்கிற கருத்தில் காங்கிரசு உள்ளது! நாம் அப்படிப்பட்டவர்கள் அல்லவே! தி.மு.க. கவிழ்வதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. அதுவரையில் மற்றும் அப்புறம் என்ன ஆகும். இது இரண்டையும் பற்றி பட்டுச்சேலைக்காரியான நாம்தானே பாடுபட வேண்டும், ஆட்சி நமக்குத்தானே சொந்தம்? மற்றவன் சுரண்டினவரை லாபம் என்பவன்தானே? காங்கிரசும் அப்படித்தானே? அது பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனம் அல்லவே;

காமராசர்தானே நம்முடையவர், நம்மவர். இதே தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைக்கு பக்தவத்சலனார் வரலாம். சுப்பிரமணியம் வரலாம்; காங்கிரசில் டிக்கெட் இல்லை என்ற உடன் சுதந்திரா டிக்கெட் கேட்பவனே வரலாம்; இப்படியானவர்கள் யாருக்காவது நமது இலட்சியத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டால் நாம் யாராவோம் என்பது எனது நண்பர்களுக்கும் பொது மக்களுக்கும் கண்டிப்பாய்த் சொல்லுகிறேன். வழமைபோல் எப்படிப்பட்ட ஆட்சியானாலும் எதிர்த்தே தீருவோம்!

***(விடுதலை-89-ம் பிறந்தநாள் விழா மலர் -17.09.1967)***

# வந்தே மாதரம் இஸ்லாமிய வெறுப்புப் பாடல்!

'ஜெய் ஹிந்த்'-தைப் போல 'வந்தே மாதரம்' என்ற சொல்லையும் தேசபக்தி முழக்கம் என்கிறார்கள் 'சங்கிகள்'; அது உண்மையல்ல. பக்கிம் சந்திரா சட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனர் 1880இல் எழுதிய 'ஆனந்த மடம்' என்ற வங்க மொழி நாவலில் இடம் பெற்றுள்ள ஒரு பாடல் அது. அப்போது ஆட்சியிலிருந்த கிழக்கிந்திய கம்பெனி, முஸ்லிம் மன்னர்கள் சிலருடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு சென்னை, பம்பாய், கலகத்தா நகரங்களில் காலூன்ற முயற்சித்த காலகட்டம் அது.

முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியை ஆயுதம் தாங்கிய போர் மூலம் ஒழித்துவிட்டு, இந்து - ஆங்கிலேய ஆட்சியை உருவாக்க வைணவ இந்துக்கள் ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதே நாவலின் மய்யமான கருத்து. சத்யானந்தா என்ற கதை நாயகன், இந்து இளைஞர்களைத் திரட்டும்போது, அந்த கதாநாயகன் பாடும் பாடலே 'வந்தே மாதரம்'.

"நமது தாய்நாட்டை விடுவிப்பதற்கு இனம் - மதம் - பண்பாடு பெருமையைக் காப்பதற்கு, முஸ்லிம்களை ஒழித்தாக வேண்டும்; அவர்களை ஒழிக்காவிட்டால் நமது தர்மத்துக்கு எதிர்காலமே இல்லை; 7 கோடி இந்துக்கள் வாளேந்தி களத்தில் குதிப்போம்" என்பதே வந்தே மாதரம் பாடலின் கருத்து. வந்தே மாதரம் பாடலைப் பாடி வைணவ இந்து இளைஞர்கள் முஸ்லிம்களை கொலைசெய்து, முஸ்லிம் பெண்களை 'பாலுறவு' வன்முறைக்கு உள்ளாக்கி முற்றாக ஒழித்து விட்டு, காளி தேவி முன் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்.

அப்போது கதாநாயகன் சத்யானந்தாவிடம், "நாம் தான் முஸ்லிம்களை அழிந்து ஒழித்து விட்டோமே; இந்து இராஜ்யம் வரவில்லையே; ஆங்கிலேயர்கள் தானே ஆட்சி செய்கிறார்கள்?" என்று கேட்கிறார்கள். அதற்கு கதையின் நாயகன் சத்யானந்தா, "இப்போது நமக்கு எதிரிகளே இல்லை; ஆங்கிலேயர்கள் நம்முடைய நண்பர்கள்; அவர்கள் தங்கள் அதிகாரங்களை நம்முடைய விஷ்ணு கடவுளுக்குத் தான் காணிக்கையாக்கியிருக்கிறார்கள்" என்று பதில் கூறுகிறார். இப்படி இஸ்லாமியர் ஒழிப்பையும் ஆங்கிலேயர் ஆதரவையும் கொண்டாடும் 'வந்தே மாதரம்' - மனுதர்ம கூட்டத்துக்கு தேசபக்தி பாடலாகி விட்டது. காந்தி 'வந்தே மாதரம்' பாடலை ஏற்பதற்கு மறுத்து விட்டார். 1937இல் காங்கிரஸ், இப்பாடலில் இடம் பெற்ற இஸ்லாமிய எதிர்ப்பு கருத்துகளை ஏற்க மறுத்து விட்டது. தேசிய கீதமாக்க முடியாது என்று கூறி விட்டது.

2006இல் 'வந்தே மாதரம்' பாடலின் நூற்றாண்டாகக் கருதி, இந்தியா முழுதும் பள்ளிகளில் பகல் 11 மணிக்கு பா டலாம். அதில் இடம் பெற்றுள்ள முஸ்லிம் எதிர்ப்பு வரிகளைப் பாட வேண்டாம். விருப்பமில்லாத பள்ளிகள் வந்தே மாதரத்தைப் பாடத் தேவையில்லை என்று ஒன்றிய காங்கிரஸ் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியது. உண்மையில், 1996 - 'வந்தே மாதரம்' பாடலுக்கு நூற்றாண்டே அல்ல; 1870இல் எழுதப்பட்டு, 1882இல் ஆனந்த மடம் நாவலில் சேர்க்கப்பட்ட பாடலுக்கு 1996 எப்படி நூற்றாண்டு ஆக முடியும்? 'வந்தே மாதரம்' பாடலைப் பாட மறுப்பவர்களை தேச துரோகிகள் என்று அப்போது குற்றம் சாட்டியது பா.ஜ.க.! பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இப்பாடலை மதராஸாக்கள் (முஸ்லிம் பள்ளிகள்) உள்ளிட்ட அனைத்து பள்ளிகளிலும் பாட வேண்டும் என்று கட்டாயப்படுத்தியது. ஆக, 'வந்தே மாதரம்' தேசபக்தி பாடல் அல்ல; இஸ்லாமிய வெறுப்பையும் ஆங்கிலேயர் புகழ்ச்சியையும் கொண்டது. பாடலின் முதல் இரண்டு பத்திகள், 'தாய் மண்ணைப் புகழ்கிறது' என்பதாலேயே அது தேசபக்திப் பாடலாகி விடாது.

விடுதலை இராசேந்திரன்
- " புரட்சிப் பெரியார் முழக்கம்" வார இதழ் 05.07.2021

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : May 14, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran